## சிறைச்சாலைத் திணைக்களத்தின் சிறைக்கைதிகள் நலன்புரி நிதியத்தின் - 2015

சிறைச்சாலைத் திணைக்களத்தின் சிறைக்கைதிகள் நலன்புரி நிதியத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவினக் கணக்கு, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1973 இன் 18 ஆம் இலக்க சிறைச்சாலைத் திணைக்களத்தின் சிறைக்கைதிகள் நலன்புரி நிதிய அதிகாரச்சட்டத்தின் 7(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 1973 இன் 18 ஆம் இலக்க சிறைச்சாலைத் திணைக்களத்தின் நலன்புரி நிதிய அதிகாரச்சட்டத்தின் 7(2) ஆம் பிரிவின் பிரகாரம் சிறைச்சாலைத் திணைக்களத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 அம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து சிறைச்சாலைத் திணைக்களத்தின் சிறைக்கைதிகள் நலன்புரி நிதியத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் - 03**

2014 ஆம் ஆண்டிற்குரிய வாரியபொல சிறைச்சாலையிலிருந்து ஏனைய திணைக்களங்களுக்கு சிறைக்கைதிகளின் ஊழியத்தை வழங்குவதற்காக பெறப்பட்ட ரூபா 21,000 தொகையை திரண்ட நிதியத்தில் சீராக்குவதற்குப் பதிலாக மீளாய்வாண்டின் வருமானமாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

**(ஆ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் - 07**

(i) நியமத்தின் பிரகாரம் சொத்தொன்றின் நியாயமான பெறுமதி அதன் பெறுமானத்தேய்விட்டதன் பின்னரான பெறுமதியில் பொருண்மையானதாக வேறுபடும் போது மீள் மதிப்பீடு செய்து மீள் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியில் இறுதிக் கணக்குகளில் சீராக்க வேண்டியிருந்த போதிலும், அதற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) சொத்தொன்றின் பெறுமானத்தேய்வு செய்யக்கூடிய பெறுமதி அதன் பயன்தரு ஆயுட்காலம் முழுவதும் சீரான அடிப்படையில் பகிரப்பட வேண்டியிருந்ததுடன் அதன் இழிவுப் பெறுமதி மற்றும் பயன்தரு ஆயுட்காலம் அவ்வப் போது மீளாய்வு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், அதற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் பிரகாரம் சொத்துக்களின் தேறிய பெறுமதி தீர்மானிக்கப்பட்ட அடிப்படை நிதிக்கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

காலி சிறைச்சாலைக்கு நன்கொடையாகக் கிடைத்த ரூபா 74,490 பெறுமதியான சொத்துக்கள் மற்றும் அதற்குரிய ரூபா 7,548 பெறுமானத் தேய்வு என்பன கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

## 2.3 பெறவேண்டிய கணக்குகள்

மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு நிதியத்திற்கு சிறைக்கைதிகளின் ஊதியத்தை கட்டாயமாக அறவிடல், சிறை ஊழிய வழங்கலிலிருந்து பெறவேண்டிய பணம் மற்றும் மீள அறவிடவேண்டிய முற்பணமாகப் பெறவேண்டிய ரூபா 1,124,923 மீதி என்பவற்றை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

வெலிக்கடை, மகசின், அனுராதபுரம் போன்ற சிறைச்சாலைகளின் உள்ளக கிளர்ச்சிகளால் சேதத்திற்குள்ளாக்கப்பட்ட நன்கொடைச் சொத்துக்கள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 104 இன் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

# 3 நிதி மீளாய்வு

## 3.1. நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான நிதியத்தின் நிதி விளைவு ரூபா 2,019,114 பற்றாக்குறையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் நிதிவிளைவு ரூபா 2,420,279 பற்றாக்குறையாக இருந்தது. அதன் பிரகாரம் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் பற்றாக்குறையில் ரூபா 401,165 குறைவொன்று அவதானிக்கப்பட்டது. சிறைக்கைதிகளின் விளையாட்டு மற்றும் ஏனைய செலவினங்கள் குறைவடைந்தமை இதற்கு பிரதானமாகத் தாக்கமளித்திருந்தது.

# 4 செயற்பாட்டு மீளாய்வு

## 4.1 செயலாற்றல்

(அ) 1973 இன் 18 ஆம் இலக்க சிறைச்சாலைத் திணைக்களத்தின் சிறைக்கைதிகள் நலன்புரி நிதிய அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் சிறைக்கைதிகளின் ஆன்மீக மற்றும் சமய நற் கிரியைகள், கல்வி ரீதியான நற்செயல்கள், சிறைக்கைதிகளுக்கான வினோத விளையாட்டு வசதிகள் மற்றும் ஏனைய ஆரோக்கிய வசதிகளை வழங்குதல், சிறைக்கைதிகளுக்கு பரிசு வழங்குதல், கண்காட்சிகளை ஒழுங்கமைத்தல் மற்றும் சிறைக்கைதிகளுக்காக சிற்றுண்டிச்சாலை நடாத்திச் செல்லும் வகையில் மீளச் செலுத்தக்கூடிய முற்பணங்களைச் செலுத்துதல் என்பன நிதியத்தின் பணிகளாக இருந்தன.

(ஆ) மீளாய்வாண்டிற்கான நிதியத்தின் வருமானம் ரூபா 1,449,150 ஆக இருந்ததுடன் சிறைக்கைதிகளின் நலன்புரி செயற்பாடுகளுக்காக மூலதனம் தவிர்ந்த ரூபா 1,907,884 தொகை செலவிடப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நிதியத்திற்காக வருமானங்களைப் பெற்றுக்கொள்வதற்கு சிறைச்சாலைகளில் சிற்றுண்டிச்சாலைகளை நடாத்துவதற்கு அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் நிதி ஏற்பாடு ஏற்படுத்தப்பட்டிருந்த போதிலும், இது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் ஆன்மீக மற்றும் சமய அலுவல்கள், கல்வி மற்றும் நலன்புரிச் செலவினம், விளையாட்டு மற்றும் ஏனைய வசதிகள், பரிசு வழங்கல் மற்றும் பின்தொடர் பொறுப்புச் சேவைகள் போன்ற 05 செலவின விடயங்களில் மதிப்பீடு செய்யப்பட்ட செலவினம் மற்றும் நிதி ஏற்பாடு செய்யப்பட்ட தொகை என்பவற்றிக்கிடையே முரண்கள் 41 சதவீதம் முதல் 85 சதவீதம் வரையிலான வீச்சில் அவதானிக்கப்பட்டதுடன் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தபடாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

(அ) சிறைக்கைதிகள் நலன்புரி நிதியத்தின் பணிகள் தொடர்பாக முறையான உள்ளகக் கணக்காய்வு பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதியத்தின் செயற்பாடுகளுக்காக 2015 ஆம் ஆண்டிற்காக மூலதன மற்றும் மீண்டெழும் செலவினங்களுக்காக ரூபா 5,368,500 தொகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் சிறைக்கைத்திகள் நலன்புரி செயற்பாடுகளுக்காக உள்ளபடியாக ஏற்பட்ட செலவினம் ரூபா 2,010,414 ஆகும். மதிப்பீடு செய்யப்பட்ட செலவினத்தில் 37 சதவீதமான அந்த செலவினத்தின் வரையறை நோக்கங்களை நிறைவேற்றுவதில் தாக்கமளித்திருந்தது.

(இ) 27 சிறைச்சாலை நிறுவனங்கள் தொடர்பாக மதிப்பீடு செய்யப்பட்ட கொடுப்பனவுகளுக்கும் உள்ளபடியான கொடுப்பனவுகளுக்கும் இடையே 22 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையிலான முரண்களும், 14 சிறைச்சாலை நிறுவனங்கள் தொடர்பாக மதிப்பீடு செய்யப்பட்ட பெறுவனவுகளுக்கும் உள்ளபடியான பெறுவனவுகளுக்கும் இடையே 53 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையிலான முரண்களும் அவதானிக்கப்படாமையால் பாதீடு ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) அம்பேபுஸ்ஸ சிறைச்சாலையின் செலவினம் மதிப்பீடு செய்யப்படாதிருந்ததுடன் கேகாலை சிறைச்சாலையினால் 2015 ஆம் ஆண்டிற்குரிய வருமான மதிப்பீடும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகத்தின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டதுடன் பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீடு செய்யப்பட்ட செலவினத்திற்கும் உள்ளபடியான செலவினத்திற்கும் இடையே முரண்கள் ஆகக் குறைந்த மட்டத்தில் பேணும் வகையில் செலவினத்தை முகாமை செய்தல்

(ஆ) கணக்கீடு

சரியான செலவின வகைப்படுத்தலை மேற்கொள்ளல், சரியான இருப்பு மதிப்பீட்டை மேற்கொள்ளல், உரிய பிரகாரம் கணக்குகளில் சீராக்கங்களை மேற்கொள்ளல், பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களைப் பின்பற்றல்

(இ) சிறைக்கைதிகளின் நலன்புரி

கைதிகள் நலன்புரி தொடர்பாக முறையான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டு அதனை அமுல்படுத்துவது தொடர்பில் அதிக அக்கறை காட்டப்பட வேண்டியிருந்தமையும் அதன் மூலம் கைதிகளின் நல்ல மனப்பாங்கை விருத்தி செய்வதற்கு கட்டமைப்பொன்றை ஏற்படுத்துதல் மற்றும் நலன்புரி கணக்கு செயற்பாடுகளை சுற்றறிக்கைகளின் பிரகாரம் மேற்கொள்ளல்

(ஈ) நிலையான சொத்துப் பதிவேடொன்றைப் பேணுதல்

-----------------------------------------------------------------------------------------

சொத்துப் பதிவேட்டை நாளதுவரையாக்குதல் மற்றும் அவற்றுக்கு பெறுமதியிடல் நியமங்களுக்கு இணங்க மேற்கொள்ளல்